From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.67/2018

Deposition of witness for: PW - 9

| | | | |
|---|---|---|---|
| Name | : வளர்மதி | Father/Husband Name | : சூரத்தேவர் |
| Age | : | Calling | : |
| Date | : 29.09.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29 day of 09.2025.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது மதுரை மாநகர் C2 சுப்பிரமணியபுரம் சட்ட ஒழுங்கு காவல் நிலைத்தில் சிறப்பு சார்பு ஆயவாளராக பணிபுரிகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 06.02.2018ம் தேதி பெண் தலைமை காவலர் யசோதாவுடன், நானும் சேர்ந்து குற்ற எண் 5/2010 வழக்கு தொடர்பாக மதுரை கூடுதல் மகிளா நீதிமன்றம் பிறப்பித்த பிடிகட்டளையை நிறைவேற்ற அனைத்து மகளிர் நகர்காவல் நிலையம் தெற்கு சார்பு ஆய்வாள சித்திரை செல்வியிடம் அனுமதி பெற்று 7 வது எதிரி பாஸ்கரன், த/பெ.முத்தன், 1/12 வடக்கு நாவினிப்பட்டி, மதுரை மாவட்டம் என்பவரை நேரில் சென்று விசாரித்தபோது சுமார் 13.00 மணிக்கு பாலா என்பவர் எங்களை பொதுஇடத்தில் வைத்து " போன வாரம் இரண்டு போலீஸ் காரி வந்தாங்க, முஞ்சி கூதிய பாரு, அடிச்சு கொன்னு, உங்கள அசிங்கப்படுத்துவேன், நான் ரிப்போர்ட் காரன் உங்கள நியுஸ்ல் போட்டுருவேன், வெட்டி கொன்றுவேன், தேவிடியா, அவுசாரி என பேசினார் " எங்க வண்டியில் இருந்த யசோதாவை தள்ளி பொது இடம் என்று பார்க்காமல் அங்கு பொதுமக்கள் அனைவரும் இருந்தார்கள். அவர்கள் எதிரி அசிங்கமாக பேசியதானால் எதிரி மீது வழக்கு பதிவு செய்ய

கூறினார்கள், பின்னர் அங்கிருந்து நாங்கள் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளுக்கு போன் செய்தேன், அதன் பேரில் மேலூர் காவல் நிலையத்திலிருந்து காவல் தெய்வேந்திரன், மற்றும் ஹோம்கார்ட் வந்தார்கள். அங்கிருந்து எதிரி பாலாவை மேலூர் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். 06.02.2018ம் தேதி, 16.30 மணிக்கு நானும், யசோதாவும் வந்து யசோதா புகார் மனு கொடுத்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள இரண்டாம் கையொப்பம் என்னுடையதுதான். ( **அந்த இரண்டாவது கையொப்பம் அசாஆ 3 ஆக குறீயீடு செய்யப்படுகிறது.** ). இதுசம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார், நாங்கள் நடந்ததை சொன்னோம்.

**எதிரி ஆஜர்**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவ நடந்த இடம் எது என்றால் எதிரியின் வீட்டின் அருகே உள்ள முள்ளுக்காட்டில் சம்பவம் நடைபெற்றது. சம்பவம் இடத்தை சுற்றி மக்கள் புலக்கம் அதிகமாக இருந்தது என்றால் சரிதான். நான் அரசு பணிக்காக அங்கு சென்றேன் என்றால் சரிதான். அந்த 7ம் எதிரியான பாஸ்கர் கைது செய்யப்பட்டாரா என்றால் எனக்கு தெரியாது. எதிரியின் அப்பாவான பாஸ்கர் சேர்ந்து வாழ வில்லை, 20 வருட காலங்களாக எதிரி உடன் இல்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது, பிடிக்கட்டளையை பெற்றுக்கொண்டுதான் அங்கு சென்றேன். அசா1ற்கும், எனக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் ஞாபகம் இல்லை. நாங்கள் சென்ற வாகனத்திற்கு சேதம் ஏற்படவில்லை என்றால் சரிதான். எதிரி தன்னிடம் எந்த ஆயுதமும் சம்பவத்தின்போது கையில் வைத்திருக்கவில்லை என்றால் சரிதான். எதிரி தந்தி டிவியில் செய்தி சேகரிப்பாளர் என்ற விவரம் தெரிந்துகொண்டேனா என்றால் Reporter

என்று அவர் சொல்லி தெரிந்துகொண்டேன்.

2) எதிரி உடன் பிறந்த இரண்டு சகோதரிகள் உள்ள விவரம் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நான் புகாரில் சொன்னதுபோல் எதிரி என்னை பார்த்து தரக்குறைவான வார்த்தைகளை சொல்லவில்லை, வழிமறிக்கவில்லை, அரசு பணி செய்ய விடாமல் தடுக்கவில்லை, கொலை மிரட்டல் விடுக்க வில்லை என்றால் சரியல்ல. பிடிகட்டளையை நிறைவேற்ற இயலாததால் கணக்கு காட்டவேண்டும் என்று எதிரி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை, துறைவாரியான நிர்வாக திருப்பதி செய்வதற்காக, கணக்கு காட்டுவதற்காக எதிரி மீது பொய்யான வழக்க தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.